பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 03 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் திட்டங்களை திமுக அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

2. சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 83 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக இருந்ததாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. சட்டீஸ்கரில் 15 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

4. ஈரானின் தற்காலிக தலைவராக திரு Ayatollah Alireza Arafi நியமிக்கப்பட்டுள்ளார்.

5. உலகக்கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச்சுற்றுப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

மத்திய அரசின் திட்டங்களை திமுக அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்தின் மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

***(Sound Byte — Modi (1) — 50 Sec. )***

திமுக - காங்கிரஸ் கூட்டணி, மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது தமிழகத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றவில்லை என்றும் பிரதமர் குறை கூறினார்.

***(Sound Byte — Modi (2) — 50 Sec. )***

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் தமிழகத்தில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

***(Sound Byte — Modi (3) — 50 Sec. )***

திமுக ஆட்சி காலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிரதமர் கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும்போது பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம் உறுதி செய்யப்படுவதோடு அவர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

திமுக அமைச்சர்கள் ஊழல் புரிவதில் போட்டி போடுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

வளர்ந்த நாடுகளுடன் மத்திய அரசு மேற்கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் தமிழகத்தில் இளையோர், விவசாயிகள் மற்றும் சிறு-குறு தொழில்முனைவோர் பெரிதும் பயனடைவார்கள் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்று உரையாற்றினார்.

<<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 83 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக இருந்ததாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் எட்டு புள்ளி ஒரு சதவீதம் அதிகமாகும் என்று நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>>

ஈரானின் தற்காலிக தலைவராக திரு **Ayatollah Alireza Arafi** நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டாக நடத்திய வான்வழி தாக்குதலில் அந்நாட்டு தலைவர் திரு **Ayatollah Ali Khamenei** கொல்லப்பட்டதையடுத்து புதிய தலைவராக திரு **Ayatollah Alireza Arafi** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டு தாக்குதல் நடவடிக்கைக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புதின் சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், இந்த தாக்குதலில் ஈரான் தலைவர் **Ayatollah Ali Khamenei** கொல்லப்பட்டது சர்வதேச சட்டத்திற்கு எதிரான நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா — ஈரான் இடையே பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் **Ayatollah Ali Khamenei** முக்கிய பங்கு வகித்ததாக ரஷ்ய அதிபர் கூறியுள்ளார்.

ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸூம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் செயல்பாடுகளை குறை கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதற்கும் திரு அன்டோனியோ குட்ரஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஈரான் சூழல் காரணமாக பக்ரைன், குவைத், ஈரான், ஓமன், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டில் நாளை நடைபெறுவதாக இருந்த 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக சிபிஎஸ்இ அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

மக்களிடையே நீதித்துறையின் மீதான நம்பிக்கை அதிகரித்து வருவதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் கூறியுள்ளார்.

ஆந்திராவின் **Daminedu**-வில் புதிய மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கான கட்டுமானப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மக்களுக்கு விரைவாக நீதி கிடைப்பதற்கு வழக்கறிஞர்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஒருங்கிணைந்த செயல்படுவதன் மூலம், நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைக்க இயலும் என்றும் திரு சூரியகாந்த் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

சட்டீஸ்கரில் **15** நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

**Mahasamund** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் காவல்துறையினரிடம் இவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்தவர்களில் ஒன்பது பேர் பெண்கள் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

**73** லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்த இந்த நக்சலைட்டுகள் ஆயுதங்களையும் ஒப்படைத்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்கத்தில் ஊடுருவல்கார்களுக்கு ஆதரவாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி செயல்படுவதாக, பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று **Cooch Behar**-ல் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்குவங்கத்தை ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசு ஊழல் நிறைந்தது என்று குறை கூறினார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்குவங்க மக்கள் இதற்கு உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் திரு நிதின் நபின் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்

<<<<<<<>>>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச்சுற்றுப் போட்டிக்கான இந்தியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Salima Tete** தலைமையிலான இந்த அணியில், **20** பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி ஹைதராபாதில் வரும் **8**-ஆம் தேதி தொடங்கி, **14**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Madhvendra Shekhawat** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **60** மீட்டர் தடை ஓட்டப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------

**Prague** சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் — செக் குடியரசின் **David Navara** இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

-------------

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா — வெஸ்ட் இண்டீஸ் இடையேயான ஆட்டம் சற்றுமுன் தொடங்கியது.

கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்துவரும் வெஸ்ட் இண்டீஸ் **4** ஓவரில் விக்கெட் இழப்பின்றி **28** ரன் எடுத்துள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் உள்ளன.

-----------

அல்பேனியா சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

மகளிர் **57** கிலோ எடைப்பிரிவில் **Neha Sangwan-**னும், **53** கிலோ எடைப்பிரிவில் **Meenakshi-**ம் இப்பதக்கங்களை வென்றனர்.

**<<<<<<<<end>>>>>>>>**